உ
சிவமயம்

# இந்து சாதனம்

சைவ பரிபாலன சபை வெளியீடு.

வெள்ளிக்கிழமை தோறும்
வெளிவருவது

HINDU ORGAN

செய்தித் தாளாகப்
பதிவுபெற்றது

பிரதி விலை: சதம் 20.

ஆரம்பம்: விரோதி ஞூ (1889) ஆவணிமீ 2உ-ம் உ   அச்சகம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, 450. காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.   தொலைபேசி: 356

புத் - கூ0]   யாழ்ப்பாணம்:- காலயுத்தி ஞூ சித்திரை மீ உஉ-ஙு   வெள்ளிக்கிழமை (5 - 5 - 1978)   [இல: ரு

கவிஞர் சிகாமணி பிரமஸ்ரீ கா. அப்பாச்சாமி ஐயர் அவர்கள்
இயற்றிய

## நகுலகிரிப்புராண மூலமும்

இளைப்பாறிய தலைமையாசிரியர்
திரு. செ. சிவசுப்பிரமணியம் அவர்கள் எழுதிய

## உரையும்

### அணிந்துரை

[ சிவத்தமிழ்ச்செல்வி, பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி
அவர்கள் உதவியது ]

"நாடும் நகரமும் நற்றிருக் கோயிலும்
தேடுமின் தேடிச் சிவபெரு மானென்று
பாடுமின் பாடிப் பணிமின் பணிந்தபின்
கூடிய நெஞ்சத்துக் கோயிலாய்க் கொண்மினே"

மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றினாலும் சிறப்புப்பெற்ற தலம் நகுலேசுவரமாகும். விஜயன் காலத்துக்கு முன்பே இத்தலம் சிறப்புற்று விளங்கிய தென்பதை வரலாறு காட்டுகிறது. இவன் பழைய சிவாலயங்களைத் திருத்தம் செய்தானென்றும், புதிய சிவாலயங்களைக் கட்டுவித்தானென்றும் யாழ்ப்பாண வைபவமாலை கூறுகிறது. இவனுடைய ஆட்சியில் ஈழத்தில் நான்கு திக்குகளிலும் நான்கு சிவன் கோயில்கள் கட்டப்பட்டிருந்தன. வடக்கே கீரிமலைச் சிவன்கோவிலும், கிழக்கே கோணேசுவரமும், தெற்கே மாத்தறைச் சிவன் கோவிலும், மேற்கே திருக்கேதீச்சுவரமும் விஜயனால் புதுக்குவிக்கப்பட்டன. விஜயனுக்கு முன்பே நாகமன்னர்கள் காலத்தில் இலங்கையின் சிவத்தலங்கள் பற்றிய குறிப்புகள் இடம்பெற்றுள்ளன. அவற்றுள் நகுலேசுவரமும் ஒன்றாகும். இவ்வாலயத்தின் பழைய பெயர் திருத்தம்பலை என்பதாகும். கீரிமலையை நகுலகிரி என்றும் கூறுவர். இதனாலேயே ஆலயத்தின் பெயரை நகுலேசுவரம் என்று அழைத்தனர். இத்தலத்தின் மேற் பாடப்பட்ட புராணமும் நகுலகிரிப் புராணமெனப் பெயர் பெற்றுள்ளது.

புராணமென்பது பழமையான வரலாறு என்னும் பொருளைக் கொண்டது. இப்புராணங்களின் மூலந்தான் சைவமதம் அன்றுதொட்டு இன்றுவரை பேணப்பட்டு வந்தது என்று கூறினால் அதில் மிகையொன்றுமில்லை. கற்போருக்கும் கேட்போருக்கும் இதமாக அமைந்தவை இப்புராணங்களே. வேத நுட்பங்களைப் பூதக் கண்ணாடிபோல் விளக்குஞ் சிறப்பைப் புராணங்களிற் காணகிறோம். இத்தகைய புராணங்களிலே தல புராணங்கள் தனிப்பட்டவை. அவை ஒவ்வொரு தலத்தின் பெருமையை எடுத்துக் காட்டி வழிபடுவோரை ஊக்குவிப்பன, தல யாத்திரைக்கு ஆற்றுப்படுத்துவன தல புராணங்களே.

நகுலகிரிப் புராணம் என்ற பெயரில் இந் நூலைப் பாடியருளியவர் பிரமஸ்ரீ கா. அப்பாச்சாமி ஐயரவர்கள் என்பதை அறிவோம், ஐயரவர்கள் சிறந்த அருட்பாடல்களைப் பாடுவதில் திறமை மிக்கவர் என்பதை இப்புராணம் எடுத்துக் காட்டுகிறது. பெரிய புராணம், கந்த புராணம், திருவிளையாடற் புராணம் என்பவற்றிலே தோய்ந்தவரென்பதும் புலப்படுகின்றது. பெரிய புராணத்துக்குப் பதின்மூன்று சருக்கங்கள் அமைந்ததுபோல இந்நூலுக்கும் பதின்மூன்று பிரிவுகள் அமைந்துள்ளன. அவற்றுள் முதல் இரண்டு பகுதிகளும் கடவுள் வாழ்த்தும் அவையடக்க

(வளர்ச்சி 3- ஆம் பக்கம்)

# அரனுக்கு அன்பராம் அடியார் பெருமை

— "பாரதி" —

அளவில்லாத பெருமையராகிய அளவிலா அடியார் புகழ் கூறவந்த சேக்கிழார் சுவாமிகள் பெருகு தண்கடல் உற்றுண் பெருநசை ஒரு சுணங்கனை ஒக்கும் தகைமையேன், ஆனால் அளவில் ஆசை துரப்ப அறைகுவேனென்று கூறி யாத்த புராணம்தான் மாக்கள் சிந்தையுட் சார்ந்து நின்ற பொங்கிய இருளை, ஏனைப் புற இருள் போக்குகின்ற செங்கதிரவன் போல் நீக்கும் திருத்தொண்டர் புராணமாக மலர்ந்தது.

உலகம் உய்யவும் சைவம் நின்றோங்கவும் திருவவதாரஞ் செய்த அடியார்கள் சாமானியமானவர்களல்லர்; மாதொருபாகனார்க்கு வழி வழி அடிமை செய்து அதன் பயனுக்கப்பெறுவது சிவன்பாலன்பாம் பேறெனப் பெருகி வாழ்பவர்கள். பத்தியின் பாலராகிப் பரமனுக்கு ஆளாம் இவ்வன்பர்கள் பூதம் ஐந்தும் நிலையிற் கலங்கினும் மாதொர் பாகத்தர் மலர்த்தாள் மறப்பிலார்; மாசிலாத மணிதிகழ், தங்கள் மேனியிலே பூசிய நீறுபோல உள்ளமும் புனிதமானவர்கள். அதனாற்றான் உமாபதிசிவாசாரியரும் அவர்களை "உள்ளும் புறமும் ஒருதன்மைக்காட்சியர்" என்று நயம்படக் கூறுகிறார். இதுமட்டுமல்ல! அவர்கள் கேடும் ஆக்கமும் கெட்ட திருவினர்; ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார். அப்பர் சுவாமிகள் மார்பாரப் பொழிகண்ணீர் மழைவாரும் திருவடிவும், மதுரவாக்கிற் சேர்வாகும் திருவாயிற் தீந்தமிழின் மாலைகளும், செம்பொற்றாளே சார்வான திருமனமும் கொண்டு உழவாரத் திருப்பணி செய்யும்பொழுது பொன்னும் நவமணிகளும் நிறைந்து கிடந்தனவாம். சுவாமிகள் என்னசெய்தார் "உருள்பருக்கையுடன் ஒக்க வீசினார்" என்று சேக்கிழார் கூறி உருகுகிறார். இவ்வாறு அன்பினாலே கைத்திருத்தொண்டு செய்கடப்பாட்டினாரான இவர்கள் அதற்வேண்டி 'மூன்" ஆண்டவர்கள். பழவடியார்கள். இன்றுநேற்றல்லவென்றே அடிமைப்பட்டுவிட்டார்கள், ஆண்டவனுக்கு- சுந்தரரின் பாட்டனார் திருவெண்ணெய் நல்லூர்ப்பெருமானுக்கு ஓர் ஓலை எழுதிக் கொடுத்திருக்கிறாராம் எப்படி? "அருமறை நாவல் ஆதிசைவன் ஆரூரன் செய்கை பெருமுனி வெண்ணெய் நல்லூர்ப் பித்தனுக்கு யானும் என்பால் வருமுறை மரபுளோரும் வழித்தொண்டு செய்தற்கு ஓலை இருமையால் எழுதி நேர்ந்தேன்" என்று. அதனாலேதான் வன்தொண்டரை வலிய ஆட்கொண்ட வள்ளல் "முன்பு நீ நமக்குத் தொண்டன்" என்று அருளினார். இந்த அடியார்கள் ஆரம் கண்டிகை ஆடையும் கந்தையாய் பாரம் ஈசன் பணிவது ஒன்றல்லாதவராய், கூடும் அன்பினில் கும்பிடலேயன்றி வீடும் வேண்டா விறலின் விளங்கியவர்கள், திருநீற்றையும் உருத்திராட்சத்தையும் சிவனே என எண்ணுபவர்கள். சிவம் என்ற சொல்லைக் கேட்டாலே பரவசராகி விடுவர். சுந்தரர் "மற்று நீ வன்மை பேசி வன்தொண்டனென்னும் நாமம் பெற்றனை" என்று எழுந்த இறைவனின் அசரீரி ஓசை கேட்டதும் ஈன்ற ஆன் கனைப்புக்கேட்ட கன்றுபோற் கதறி உள்ளம் கரைசரந்து அங்கம் அனைத்தும் புளகமாகத் தொழுத கை தலைமேலாக வீழ்ந்து வணங்கினாராம், திருநாவுக்கரசு சுவாமி

(வளர்ச்சி 2- ஆம் பக்கம்)

### திருஞானசம்பந்தர் திருவுருவப் படம்

21-5-78-ல் வருகின்ற ஞானசம்பந்த சுவாமிகள் குருபூசையைச் சிறப்பாகக் கொண்டாட விரும்பும் சபைகளுக்கும் மன்றங்களுக்கும் சுவாமிகளின் திருவுருவப் படம் இலவசமாக வழங்கப்படுமென்பதை மிகக் கவைத் தாபனத்தார் அறிவிக்கின்றனர்.

### சமயக் கல்வி கற்கும் மாணவர்களே!

சைவநெறியிற் கல்வி புகட்ட வேண்டும் என்று தெய்வப் பணி புரிந்த குரவர் நாவலரின் சைவ வினாவிடை, பாலபாடம், பெரிய புராண வசனம் கற்கின்றீர்களா?

இந்தப் பணியைத் தொடர்ந்தாற்றிய சைவப் பெரியார் சிவபாத சுந்தரனாரின் சைவபோதம், திருவருட் பயனுரை படித்திருக்கின்றீர்களா?

இவற்றை உங்களுக்கு உங்கள் ஆசிரியர்கள் அறிமுகப் படுத்தவில்லையா!

### புராணபடனத்திற் புத்துணர்ச்சி

வழமைபோல மாவைக் கந்தன் ஆலயத்திலும் மல்லைப் பழம் பிள்ளையார் கோயிலிலும் கந்தபுராண படனம் கிரமமாக நடைபெறுவது குறிப்பிடத் தக்கது.

பிரம்மஸ்ரீ வ. குகசர்மா அவர்களின் புராண உரைப் பொலிவு பல அடியார்களை இந்நிகழ்ச்சியில் ஈடுபடுத்துகின்றது.

துர்க்கை அம்பாள் ஆலயத்திலே பெரிய புராணப் படிப்பு பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களால் ஒழுங்குசெய்யப் பெற்று, சிறப்பாக நிகழ்கின்றது. பிரமஸ்ரீ வ. குகசர்மா அவர்களும் பண்டிதர் . நமசிவாயம் அவர்களும் முக்கிய பங்குகொள்கின்றனர்.

## சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவர் ஆனினம் வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையக முந்துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

காலயுத்தி ஞூ சித்திரை மீ உஉ-உ வெள்ளி

## முன்னேற்றத்துக்கு வழிஎன்ன முயற்சியே!

வாழ்க்கை வளம் குன்றிவிட்டது. வருவாய்க்கு மேலாக விரயம் செய்ய வேண்டி இருக்கிறதே என்றெல்லாம் பொதுமக்கள் புலம்பியவண்ணம் இருக்கின்றார்கள்; சமூக நலத்துக்காக உழைக்கின்றோம் என்று பறை சாற்றித் திரிபவர்களும் வழி கோலுவதின்றி மற்றையோர்மீது பழி சுமத்துவதும் பரபரப்பை உண்டுபண்ணுவதுமாகவே காலத்தைக் கழிக்கின்றனர். ஈற்றிலே எல்லோரும் கட்டாற்றிலே விடப்பட்டவர்களாக வினை சூழுகின்றதே.

இந்த நிலைமைக்குக் காரணம் என்ன என்று சிறிது சிந்தித்துப் பார்த்தால் முயற்சியின்மையே என்பது வெளிப்படையாகின்றது.

அரசிலும் அயலிலும் அடுத்த சுற்றத்திலும் நண்பர்களிலும் தங்கியிருக்கும் தன்மைதான் சமுதாயத்தைக் கெடுக்கின்றது. இறைவன் திருவருளைப் பெறுவதற்கு நெறியுண்டு; ஆனால் அவ்வழியில் முயற்சி செய்யமுடியாத சமுதாயம் அல்லற்படுகின்றது.

சொல் அலங்காரச் சுலோகங்களை அள்ளும் பகலும் எடுத்துரைப்பதுவும் புரட்சி புரட்சி என்று மனத்தைப் புரட்டிக் கொண்டிருப்பதுவும் சமுதாயத்தின் புது நிலைமையாய் விட்டது.

இதற்கு என்ன மாற்று மருந்து?

ஊக்கம் ஆக்கம் தரும் என்ற உண்மையைக் கொண்ட நோக்கம் சமுதாயத்தின் குறிக்கோளாக இருந்தால் உள்ளத்தில் அமைதியான இன்பம் உண்டாகும். எம் முன்னோர்கள் எல்லோரும தம் முயற்சியிலேயே நம்பிக்கை கொண்டவர்களாயிருந்தனர். அதற்குக் காரணம் இறைவனை என்றும் மறவாது இறைஞ்சிய வண்ணம் வாழ்ந்தமையே. கடவுளைக் கை தொழுது ஆகாதன விலக்கி ஆவது புரிந்து வந்த பழைய பரம்பரையைப்பற்றிச் சற்று நினைப்போமேயானால் எமக்குச் சோம்பல் இருக்கமாட்டாது. கருமம் செய்வதே தருமம் என்ற ஞானம் பிறக்கும். கடமை என்ற இலட்சியம் கண் முன்னாகும். வரலாற்றிலே புகழ்பெற்ற மன்னரும் மற்று முன்னோரும் கருமமே கண்ணாயிருந்தவர்கள். கடமை மறவாதவர்கள். எனவே புனிதத்திலிருந்து புரட்சியிற் சிக்குண்ட மனித குலம மறுபடியும தனித்துவத்தைப் பெற ஈசனை எண்ணி முயற்சியில் ஈடுபடட்டும்; எல்லாம் நல்லாக இயங்கும்.

முயற்சி உடையர் முதன்மை அடைவர்.
அயர்ச்சி அடையார், ஆற்றல் - உயர்ச்சி
பெறுவர், இறைவன் பெருங்கருணைப் பேறும்
உறுவர், அவரே உலகு.

## குறும்பர்களையும் குணமாக்கிய குரவர்

பெரும் பேறு பெற்ற திருவாதவூரடிகள் திருவாசகமென்னும் சிவநூலிலே "பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளை" என்று அருமையாக ஒரு கருத்தைத் தருகின்றார். அந்த அடிப்படையிலே மாணக்கர்களை வளர்த்துயர்த்திய ஆசான் ஒருவர் இந்த நாட்டில் இருந்தார் என்று சொல்வதற்குச் சைவ சித்தாந்த மெய் அடியார் சிவபாதசுந்தரனாரின் வாழ்க்கைப் பணி அமைந்துள்ளது என்பதை அவரிடம் கல்வி பயின்றவர்கள் உணர்வார்கள். ஈழத்

## "ஆத்மஜோதி" ஆசிரியர் அறுபதாண்டு நிறைவு விழா

'ஆத்மஜோதி' சஞ்சிகையின் ஆசிரியர் திரு. நா. முத்தையா அவர்களின் சஷ்டியப்த பூர்த்தி சாந்தி விழா வைபவம் இம் மாதம் 11-ஆம் திகதி திங்கட்கிழமை நாவலப்பிட்டியில் நடைபெறவிருக்கிறது. அன்று மாத்தளை அம்பாள் தேவத்தான பிரதமகுரு பிரம்மஸ்ரீ கி. சுப்பிரமணியக் குருக்கள் விழாவை நடத்தி வைப்பர்.

மாலை நிகழ்ச்சிகள் 4 மணிக்கு திரு பி. டி. கிருஷ்ணசாமி தலைமையில் நிகழும். கல்வி அமைச்சு வித்தியாதிபதி திரு. கி இலக்ஷ்மண ஐயர் திருகோணமலை இளைஞர் அருள்நெறி மன்ற இயக்குநர் தொண்டர் சண்முகராசா, அ. இ. இந்து இளைஞர் மன்றத் தலைவர் திரு பொ. வல்லிபுரம், கொழும்பு ஸ்ரீ ராமகான சபைத் தலைவர் திரு. எஸ். பாலசுப்பிரமணிய ஐயர்; காரைநகர் இந்துக் கல்லூரி விரிவுரையாளர் வித்துவான் சைவமணி மு சபாரத்தினம், பல்கலைக்கழக வைத்தியப் பிரிவு விரிவுரையாளர் கலாநிதி சி. சிவஞானசுந்தரம் (நந்தி) ஆகியோர் ஆசியுரை வழங்குவர், மதுரை திருப்புகழ் தவமணி கே வி. தியாகராசன் குழுவினரின் திருப்புகழ்இன்னிசையும் சங்கீத கதாப்பிரசங்கமும் சிறப்பு நிகழ்ச்சியாக நடைபெறும்

தமிழகத்திலே இலங்கிய அறிவுச் சுடர்களில் எவ்வாற்றானும் இணையிலா ஆறுமுக நாவலர் பெருந்தகையே பேரொளியாய் விசியவர். அந்தச் சோதி மயத்தில் வளர்ந்த அறிஞர் குழாம் நாவலர்நற்பணிக் காவலர் குழாமாக இயங்கி வந்ததென்பதை இந் நூற்றாண்டின் கல்வி வரலாறு காட்டும். அப்பெருங் குழாத்தின் நாப்பணாக இருந்து நாவலர் நெறியை நிலை நாட்டிய ஆசானாக விளங்கியவர் சைவ சித்தாந்தப் பேரறிஞர் சிவபாத சுந்தரனார்.

'கற்கக் கசடற' என்ற வள்ளுவர் கட்டளை உள்ளவாறுணர்ந்து மேற்கொண்டவர்கள் மிகச் சிலரே. காரணம் கசடறக் கற்பதானால் மெய்கண்ட சாத்திரங்களை அறிந்து திருமுறை நெறியில் நிற்பதெனபதே கருத்து. இதுதான் நாவலர் நெறி. எனவே நாவலர் நற்பணிக் காவலர்! நடு நாயகமாக விளங்கிய சிவபாதசுந்தரனார் கசடறக் கற்றவர். கற்றவழி நிற்கத் தகைமை பெற்றவர் என்பது புலனாகும்.

நாமெல்லோரும் மாணாக்கர்களாக விருந்த காலத்திலே நாவலர், நாவலர் என்று ஆசிரியர்கள் கூறவும் சைவ வினாவிடை, பாலபாடம் பெரிய புராண வசனம் முதலிய புத்தகங்களை நினைவூட்டவும யார் இந்த நாவலர் என்று எண்ணும்பொழுதெல்லாம் நாற் பெருங் குரவர்போற் காட்சியராக நாவலர் நற்றவையாரின் சிந்தனை உள்ளத்திலே உருவாகும் உணர்ச்சி தோன்றுவது வழக்கம். இந்த நிலையிலே வயது சற்று வந்த வேளையிலே கல்லூரிப் படிப்புக் காலத்திலே சிவபாதசுந்தரனாரின் சீரிய தோற்றம் அந்த நாவலர் ஐயாவின் உருவத்தை உள்ளத்தில் அமைக்க ஏன்றுதவியது.

## அரனுக்கு அன்பராம்....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள் எழுந்தருளியதை அறிந்த அப்பூதியடிகள் 'கரகமல மிசை குவிய கண்ணருவி பொழிந்திழிய உரை குழறி உடம்பெல்லாம் உரோம புளகம் பொலியத் தரையின் மிசை வீழ்ந்து அவர்தம் சரணகமலம் பூண்டார்.' இவ்வாறு தம் சித்தத்தைச் சிவன்பாலே வைத்த அடியார்கள் வேண்டுமாறு விருப்புறும் வேடத்தர் இவர்களுடைய பெருமை சொல்லவும் பெரிதே என்கின்றார், ஔவையார்.

'பெரிது பெரிது புவனம் பெரிது புவனமோ நான்முகன் படைப்பு
நான்முகன் கரியமால் உந்தியில் வந்தோன் கரியமாலோ
அலைகடற் றுயின்றோன்
அலைகடல் குறுமுனி அங்கையிலடக்கம் குறுமுனியோ
கலசத்திற் பிறந்தோன்
கலசமோ புவியினிற்சிறுமண் புவியோ அரவினுக்கு ஒருதலைப்பாரம்
அரவோ உமையவள் சிறுவிரல் மோதிரம்
உமையோ இறைவர் பாகத் தொடுக்கம்
இறைவரோ தொண்டருள்ளத் தொடுக்கம் தொண்டர்தம்
பெருமை சொல்லவும் பெரிதே.

தொண்டர் உள்ளத்தொடுங்கிய இறைவன் தன் அடியார்களுக்கு வேண்டுவன அறிந்து அவர் வேண்ட முழுதுங்கொடுத்து அருள்புரிவான். இதனால் இறைவனை, 'அன்பர்க்கு மெய்யான்' என்றும், 'என்னப்பனென்பார்கட்கின்னமுதை' என்றும் மணிவாசகர் போற்றுகின்றார். 'அடியார் அடிமை அறிவாய் போற்றி' என்றும் 'பங்கமிலா அடியார்க்குப் பரிந்தான் தன்னை' என்றும், சாற்றுகின்றார் அப்பர்.

"வாசி தீர அடியார்க்கு அருள்செய்த வளர்ந்தான் வலிதாயம்' என்று சம்பந்தப்பிள்ளையாரும், 'பத்தர் சித்தம் பாவிக் கொண்டீர்' என்று சுந்தரரும் ஏத்துகிறார்கள் இறைவனின் மூலமாம் தோற்ற முணர்ந்த அன்பாலே தம்முள்ளத்தே அவனைப் பிணித்த அடியார்களுக்கு என்றும் அச்சமில்லை 'வானந்துளங்கிலென், மண் கம்பமாகிலென், மால்வரையுந் தானந்துளங்கித் தலைதடுமாறிலென், தண்கடலும் மீனம் படிலென், விரிசுடர் வீழிலென், வேலை நஞ்சுண்டு ஊனமொன்றிலா ஒருவனுக்கு ஆட்பட்ட உத்தமர்க்கே' என்ற நிலைமை. சுண்ணவெண் சந்தனச் சாந்தும் சுடர்திங்கட் சூளாமணியும் வண்ண உரிவையுடையும் வளரும் பவளநிறமும் அண்ணல் அரண் முரணேறும் அகலம் வளாய அரவும் தண்ணெண் கெடிலப் புனலும் உடையார் ஒருவர் தமர்நாம்! அஞ்சுவது யாதொன்றுமில்லை என்ற திடமான நம்பிக்கை 'ஈண்டு வருந்துயருளவோ ஈசன் அடியார்க்கு' என உணர்ந்த அப்பர் 'நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம் நரகத்தில் இடர்ப்படோம், நடலையில்லோம்; ஏமாப்போம் பிணியறியோம். பணிவோம் அல்லோம் இன்பமே எந்நாளும் துன்பமில்லை' என்று அழகாகக் கூறுகிறார்.

தன் சூலை நோயை நீக்குப்படி வேண்டும்போது, 'அடியார் படுவது இதுவேயானால் என்போலிகள் உம்மை இனித் தெளியார்' என்று ஓர் எச்சரிக்கையும் செய்கிறார்.

சுந்தரர் இதற்கு இன்னும் ஒருபடிமேலே 'குண்டையூர்ச் சில நெல்லுப் பெற்றேன், ஆளிலை யெம்பெருமான் அவை அட்டித்தரப் பணியே' என்று வேண்டுகோள் விடுக்கிறார், தனது தொண்டனுக்காக பரவையமனை மீதிலன்று ஒரு பொழுது தூது சென்றார் பரமன். 'தொடர்ந்து கொண்டவன் தொண்டர்க்குத் தூதுபோய் நடந்த செந்தாமரை அடி நாறுமால்' என்று வியக்கின்றார் சேக்கிழார். அருணகிரிநாதர், அந்த அநுபூதிமான், பட்டிக்கடாவில வரும் அந்தகா. உனைப்பாரறிய வெட்டிப் புறங்கண்டலாது விடேன், கட்டிப் புறப்படடா சக்திவாள் என்தன் கையதுவே' என்றும 'சீராவுங் கையிற் சிறுவாளும் வேலும் என்சிந்தையவே வாராதகல் அந்தகா' என்றும் வீரம் பேசுகிறார். 'நாளென்செயும் வினைதான் என்செயும் எனை நாடிவந்த கோளென் செயும் கொடுங் கூற்றென் செயும் முருகன் எனமுன் தோன்றிடினே' என்று கேட்கிறார். இறைவன் என் உள்ளத்தே புகுந்த காரணத்தினால நாளும் கோளும் ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல அடியாரவர்க்கு மிக நல்லன என்பது ஆளுடைப் பிள்ளையார் கூற்று.

ஆகவே தன்னடியார் குற்றங்கள் நீக்கிக் குணங்

(வளர்ச்சி 3 ஆம் பக்கம்)

## ஐந்து தினங்கள் நல்லையில் விழா

தெய்வீக மாநாடும் - உற்சவமும்

நல்லை, ஞான சம்பந்தர் ஆதீனத்தில் திருநெறிய தெய்வீக மாநாடும் - ஞான சம்பந்தர் மஹோற்சவமும் 11-5-78ல் ஆரம்பமாகி ஐந்துதினங்கள்தொடர்ந்து நடைபெறும். விழாவை ஆதீன இளவரசு ஆரம்பித்து வைப்பார்கள்.

உரையரங்கு, இசையரங்கு, கவியரங்கு ஆதியாம் நிகழ்ச்சிகள் இடம்பெறும். சைவ அறிஞர்கள், தேசிய அரசுப் பேரவைத் தமிழ் உறுப்பினர்கள், பண்ணிசை விற்பன்னர்கள விழா நிகழ்ச்சிகளிற் கலந்து கொள்வர். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

## க. பொ. த. வகுப்பு
# சைவ சமய நெறி

1978 டிசம்பர் மாதப் பரீட்சைக்கும், அதற்குப் பின்னரும் உபயோகிக்கத்தக்கவாறு கல்வித் திணைக்களத்தின் 1978-ம் ஆண்டு புதியபாடத் திட்டப்படி எழுதப் பெற்று வெளிவந்துள்ளது. மாணவர்களுக்கு ஏற்ற இலகுவான நடையில் தெளிவான விளக்கங்களுடன் ஆக்கப் பெற்றது.

சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரம்பிள்ளை அவர்களின் திருவருட்பயன் 10 அதிகாரங்களும் அவர் உரையுடன் சேர்க்கப்பட்டது. அன்னாரின் 2ஆம் சைவபோதம் பெரும் பகுதியும், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களின் பெரியபுராணம், 2ஆம் சைவவினாவிடை, பண்டிதர் ம. வே. திருஞானசம்பந்தர் அவர்களின் சமயகுரவர், சந்தானகுரவர் சரித்திர வரலாற்றுச் சுருக்கமும் பாடத் திட்டத்துக்கு அமையத் தொகுக்கப்பெற்றுள்ளது.

தோத்திரப்பகுதிப் பதிகங்கள் முழுமையாகவும், திருவெம்பாவை 20 பாடல்களும் உரையுடன் கொண்டது. அரசாங்கப் பரீட்சைக்கும், சபையாரின் சமயபாடப் பரீட்சைக்கும் மிகவும் உதவியான நூல்.

— மாணவர்களுக்கு மிகச்சிறந்த பாடநூல் —

**சைவ பரிபாலனசபை வெளியீடு:**

தனிப்பிரதி விலை ரூபா 8-00

பாடசாலைகளுக்கும், தொகையாகப் பெற்றுக்கொள்பவர்களுக்கும் 20% கழிவு கொடுக்கப்படும்.

கிடைக்குமிடம்:

**சைவப் பிரகாச அச்சியந்திரசாலை**
450, கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 356

## கவிஞர்சிகாமணி இயற்றிய நகுலகிரிப் புராணம்
1-ஆம் பக்கத் தொடர்ச்சி

சுருமாக அமைய ஏனைய பதினொன்றும் படலங்களாக அமைந்துள்ளன. ஆறாம், ஏழாம், எட்டாம் படலங்களும் நகுலேசுவர ஆலயத்தின் பெருமையை உணர்வாருக்கு கற்பனையளிப்பனவாக அமைந்துள்ளன. ஆலயத்துடன் தொடர்பு கொண்டுள்ள நகுல முனிவர், இராமன், நளன், அருச்சுனன், மாருதப் புரவீகவல்லி என்போருடைய அருள் வாழ்க்கையையும் அறியக்கூடியதாக நூலாசிரியர் வருணித்துத் தந்துள்ளமை பாராட்டுதற்குரியது.

நமது செந்தமிழ் மொழியிலே இப்படியாக எத்தனையோ புராணங்கள் வெளிவந்தபோதிலும் அவற்றைப் படித்துப் பயன்பெறுவோர் மிகச்சிலரே. காரணம் கருத்துணர்ந்து படிக்கும் ஆற்றல் பலருக்கு இல்லாமையேயாகும். அறைபோகக் கற்றவர்கள் மாத்திரமன்றிச் சாதாரண மக்களும் படித்துணர்ந்து பயன் பெற வேண்டுமானால் புராணங்களுக்கு உரை எழுதப்படுவது முக்கியமாகும். இத்தகைய உயர்ந்த பணியைத் திருவாளர் செ. சிவசுப்பிரமணியம் அவர்கள் நிறைவேற்ற முன்வந்துள்ளமை மிகவும் பாராட்டுதற்குரியதே. இவர் ஒரு இளைப்பாறிய தலைமை ஆசிரியர். புராணங்களில் ஈடுபாடு கொண்டவர். இளம் பருவம் முதல் திருமுறைகள், புராணங்கள் என்பவற்றைப் படிப்பதில் ஆர்வமுடையவர். சைவத்தையும் தமிழையும் இரு கண்ணெனப் போற்றுபவர். நகுலேசுவரப் பெருமான்மீது ஆழ்ந்த பக்தியுடையவர். தமது ஓய்வு நேரங்களை அவ்வாலயப் பணிகளிலே செலவுசெய்யும் நல்வாழ்க்கையை மேற்கொண்ட பெரியார். இவர் முகத்திலே சிவப்பொலிவும், அகத்திலே சிவமணமும், வாயிலே சிவவார்த்தையும் மிளிர்வதை அனைவரும் அறிவர். இத்தகைய பெருமக்களே உரை எழுதத் தகுதிவாய்ந்தவர்கள். மெய்ப்பொருளை உணர்ந்தவர்தான் இத்தகைய பாடல்களுக்குப் பொருள் எழுதும் ஞான பலமும் உடையவர். வெறும் புலமை வெற்றுச் சொற்களைத் தொகுக்க வைக்குமேயன்றி உண்மையை உணர வைக்கமாட்டாது. ஆகவே மேற்படி ஆசிரியரவர்கள் இப்பணியை மேற்கொண்டது சாலச் சிறந்ததாகும்.

— வளரும்

## முக்காலும் சத்தியம்!

"இக் கந்தபுராணத்தை விதிப்படி மெய்யன்போடு நியமமாகக் கேட்பவர்கள் நோய்நீக்கம், செல்வம், புத்திரபாக்கியம், சத்துரு ஜயம், இராசவசியம் முதலிய பயன்களைத் தாம் தாம் வேண்டியவாறே பெறுவார்கள். இது நெடுங்காலம் பலராலும் அநுபவத்தினால் நிச்சயித்து உரைக்கப்பட்ட விஷயம். இது சத்தியம்! சத்தியம்! முக்காலும் சத்தியம்!"

— ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்.

## அரனுக்கு அன்ப
2-ம் பக்கத் தொடர்ச்சி

கொண்டு கோதாட்டி அருள்புரியும் இறைவனை வணங்குவதற்குச் சமன் அவன் அன்பராம் அடியார்களைப் பணிவது. மேலும் 'கங்கைவார் சடைக்கரந்தார்க்கு அன்பராகில் அவர்கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே" என்பது முடிபு.

"உன்னடியார் தாள் பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்" என்பது மணிவாசகர் வாக்கு. புத்தடியோம் புன்மை தீர்த்து ஆட் கொண்டாற் பொலலாம்தா, என்று ஈசன் பாங்குடைய பழவடியாரைப் பரவுவோமாக.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

MB 886 / DCM

1 சின்னையா செல்லையாவும்
2 பெண் பத்தினிப்பிள்ளையும்
இருவரும் மாவிட்டபுரம்.
வழக்காளிகள்,

எதிராக

1 வன்னிக்குட்டி சின்னக்கண்டுவும்
2 பெண் செல்லம்மாவும்
கிளாலை, மாவிட்டபுரம்
எதிராளிகள்.

மல்லாகம் டிஸ்திரிக் கோட்டில் MB 886 இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுச் சட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக் காணியை 1978-ம் ஆண்டு வைகாசி (மே) மாதம் 24-ஆம் திகதி புதன் கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

**தீர்வைத் தொகை**

முதல் வட்டி ரூபா 6700/- பின் 17-9-75 தொடக்கம் 30 4 76 வரைக்கும் ரூபா 4000/-க்கு 10 வீத வட்டியும் அதன் பின் முழுத் தொகையும் இறுபடும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 596-85 இதில் தீர்வைத் தொகையால் ரூ 1000 மும் செலவு தொகையால் ரூ 200 உம் கொடுக்கப்பட்டது.

**ஆதன விபரம்**

வட மாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் வலிகாமம் வடக்குப் பகுதி தெல்லிப்பழை கோவிற்பற்று மாவிட்டபுரமிறை 'இலாவத்தை' பில பர (9) ஒன்பது கிணறும் செய்பயிர்களும் எல்லை கிழக்கு முருகர் வல்லிபுரத்தின் ஆதனம். வடக்கு ஒழுங்கை மேற்கு மீததி ஆதனம், தெற்கு மானுர் கைபெண சின்னப்பிள்ளையின் ஆதனம். இதில் குறித்த கிணற்றில் கிழக்கெல்லைக் காணிக்குரிய பங்கும் இதற்கூடாக மேற்கு நோக்கிப் போகும் வழி வாய்க்காலுரித்தும் புறநீங்கலாக இவ்வெல்லைப்படி இடங்களும்.

சி. செ. மாரிமுத்து
விற்பனவு ஆணையாளரும்,
விலைமதிப்பாளரும்,

விதானை வளவு,
சித்தங்கேணி 14-3-78.
115 5-5-78.

## இந்துசாதனம்
சந்தா விபரம்

உள்ளூர் — ஆண்டு 18/—
புறநாடு — ஆண்டு 50/—
(ஆகாய வழி) 75/—

அதிபர்
450, கே. கே. எஸ் வீதி
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

## பூசை செய்பவர்கள்

[ அச்சுவேலி சிவஸ்ரீ ச குமாரசுவாமிக் குருக்கள் ]

(முன் வளர்ச்சி — 2)

ஒருகால் அந்தணர்கள் அமுதலிங்கேசுரருக்குப் பூசை செய்வதற்குச் சிறுவனொருவனை வைத்து விட்டு எல்லோரும் வெளிக்கொண்டு கொள்ளிடத்தைக் கடப்பதற்கு மரக்கலத்தில் ஏறிச் சென்றார்கள். சிவபெருமானுடைய திருவருளாற் சூறைக் காற்றுச் சென்று அலைக்கக் கலங்கவிழ்ந்தது. சிவப்பிராமணர்களும் மனைவியர்களும் பிள்ளைகளும் நீரில் விழுந்து சொல்லொணா வேதனையடைந்து இறந்தார்கள். ஆழமாகிய நீரில் செல்லாது எஞ்சிய சிறுவனைச் சிவபெருமான் தமது திருவருளுக்கு இலக்காகவி வேதாகமங்களை உபதேசித்து சிவ புண்ணியங்களைச் செய்யுமாறு வைத்தருளினார்.

முன்னொரு காலத்தில் குமாரக் கடவுள் திருக்கைலாச மலையினின்றும் சிவபெருமானுக்குப் பூசை செய்வதற்கு உரியவர் என்று திருப்பிடவூரில சிவப்பிராமணர்களைக் கொணர்ந்து வைத்தனர். சிவபெருமான் அவர்களுட் சிலரை அழைத்து நித்திய நைமித்தியங்களைச் செய்யும்படி வைத்தருளினார். வினைத் தொடர்ச்சியற்ற அவ்வந்தணர்கள் ஆன்மநாயகராகிய சிவபெருமான் நலவினை செய்பவர்களை அருளும் தன்மையும், தீவினை செய்பவர்களைத் தண்டிக்கும் தன்மையையும் மனதில் நினைத்து, அச்சமும் அன்புமுள்ளவர்களாய், நித்திய நைமித்தியங்களைச் சிவபெருமானுடைய திருவுள்ளத்துக்கு இயையவும், உலகம் வியக்கும் வண்ணமும் செய்தார்கள். இச்சரித்திரம் திருவானைக்காப் புராணத்திற் காணப்பட்டது.

— (வளரும்)

## ஈட்டு வழக்கில் விற்பனவு அறிவித்தல்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம்

வழக்கு இலக்கம் ஈடு / 13998

1. வயிரவநாதன் மாணிக்கராசா, தும்பளை பருத்தித்துறை, தற்போது கண்டிவீதி - பரந்தன் — வாதி,

எதிராக

1. இரத்தினம் இராசசிங்கமும் (2) பெண் வள்ளியம்மையும் இராமன் தோட்டம் அல்வாய் தெற்கு அல்வாய் பிரதிவாதிகள்.

மேற்குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதன் கீழ் விபரிக்கப்படும் ஆதனத்தை 1978-ம் ஆண்டு ஆனி மாதம் 12-ந் திகதி (12 6 78) திங்கட்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் குறித்த ஆதனத்திடமாகவிருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

**ஆதன இடாப்பு**

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி கட்டைவேலிக் கோவிற்பற்று அல்வாய் மழவராஜ குறிச்சியிறை வீரசிட்டி. இதற்கு யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டு 2279 / P-ம் இலக்க பிரிவிடல் வழக்குக் கடைசித் தீர்வையின்படி கணக்கப் பட்டதும் உலாந்தாபேஸ்சர் வே. சிவரெட்டினம் அவர்களால் 1946-ம் ஆண்டு சித்திரை மாதம் 16-ம் திகதி 254-ம் இலக்கத்தில் வித்தாரிக்கப்பட்டதுமாகிய படத்தின்படி இதன் விசாலம் நி. ப. 75 குளி 9 22 / 32 (இது யாழ்ப்பாணத்தில் A 168 / 213 ல் பதிவு). இதில் குறித்த படத்தில் 7-ம் இலக்கத் துண்டுக்கு நி. ப. 18 குளி 4 9/32 (இது பருத்தித்துறையில் A 277/171-ல் பதிவு இதில் மேற்குப் புறமாக நி. ப. 6. இதில் தெற்குப்புறமாக நி ப $1\frac{1}{2}$ நீக்கி மிகுதி நி ப. $4\frac{1}{2}$. (இது பருத்தித்துறையில் A 192 / 166 ல் பதிவு), இதுவும் மேலே நீக்கவிடப்பட்ட குறித்த நி. ப $1\frac{1}{2}$ இதுவும் சேர்ந்து ஒன்றான காணிக்கு நி ப 6 ஆறு கிணறும் எல்லை கிழக்கு கணபதிப்பிள்ளை சின்னத்துரைக்கும் பெண் மனோன்மணிக்கும் உரிய ஆதனம். வடக்கு கதிர்காமத்தம்பி ஞானபாஸ்கரனுக்குரிய ஆதனம். மேற்கு செல்லையா பெண் செல்லம்மாவுக்குமுரிய ஆதனம். தெற்கு மாலி சந்தை வரதராஜப்பிள்ளையார் கோவில் ஆதனம், இவ்வெல்லைக்குட்பட்ட நிலத்தில் சொரியலாய் நி. ப. நாலும் (4) கிணற்றில் இருபதில் மூன்று பங்கும்.

| | | |
|---|---|---|
| தீர்வைத் தொகை | ரூபா | 7398 00 |
| வட்டி ரூபா 5500 / க்கு 18 வீதப்படி 6-6-1977 தொடக்கம் 12-12-77 வரை | ,, | 495 00 |
| | | 7893 00 |
| வட்டி ரூபா 7893/ க்கு 9 வீத வட்டி 12-12-77 தொடக்கம் 12-6-78 விற்பனவு வரை | ,, | 355 18 |
| வழக்குச் செலவு | ,, | 290 18 |
| | மொத்தம் ரூபா | 8538 18 |

க. நல்லலிங்கம்
நீதிமன்ற விற்பனவு ஆணையாளரும்,
விலைமதிப்பாளரும்.

வி. எம்- ரோட்,
பருத்தித்துறை. 29-4-78
114 5-5-78.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### THOUGHTS TO BE TREASURED

இரவு பகல் இல்லா இன்ப வெளியூடே
விரவி விரவி நின்று உந்தீபற,
விரைய விரைய நின்று உந்தீபற.

Within the vast expanse of Divine Bliss, where there is neither darkness nor light, should you mingle, without faltering, yes, mingle without faltering.

Hindu Organ

Friday, 5th May, 1978

# COMMON MAN IN A COMPLICATED STRUCTURE!

Leading a nation is a sacred duty that must be discharged with utmost care and deep understanding. The responsibility in this respect has become unduly great in modern times as the life of a nation in the current context is almost a labyrinth, a complicated structure requiring proper guidance for survival. The intricacy of life has been made worse confounded by the illogical development of political thinking The ordinary man is being constantly told that the 'leaders' are thinking all the twenty-four hours to find a way out for him of the maze in which he has found himself.

What then are the chances of the people to find their way through to redress? What is it that has caused this colossal confusion, this complex network of cross roads of political ideals? And what is amazing is that the bewilderment is not confined only to a few countries. It has become a universal ulcer, an open sore with the dangerous secretion of the pus of violence Ulcerated as the political world is, how can the common man hope for correct guidance unless some laudable leader of the calibre of noble Gandhiji diagnostically deal with the disease

It is in this context that the concept of the world's greatest political leader — Mahatma Gandhi gives hope. This idea was recently referred to in a series of public lectures by Sri R. R Diwakar who had the fortune of being a personal disciple of the prophet of non-violence and participating in the struggle for freedom from evil. What had inspired Gandhiji in his search for redress was his abiding faith in Providence. The practice of religion, therefore, is a pre-requisite for leadership. That this great leader was a tee-totaller, vegetarian and worshipper of Truthfulness gives the clue to the significant success of his campaign against evil. The growing tendency of political enthusiasts to forget the fact of the efficacy of Gandhian philosophy is due to the upsurge of irreligion. Let the leaders of political movements take lessons from the Gandhian campaigns and learn to be fully religious in their activities.

## Sale of Unredeemed Pawned Jewellery

I shall sell by Public Auction the unredeemed Jewellery Pawned before 1-3-1977 with Mr. Sinnathurai Rajaretnam of 160, Brown Road, Jaffna, on Wednesday, 31-5-1978, commencing at 9 a.m. at the said Pawn-shop.

643, K. K. S. Road, Jaffna. 116 5 & 12.5.78. S. MAHADEVAN, Auctioneer.

*Letter to the Editor*

## GRAVE NATIONAL DANGER

Sir,

Crime in Sri Lanka is ever increasing by leaps and bounds. It is one of the gravest dangers confronting the Nation today. The fact that crime is rampant in other countries also is no consolation or excuse for us. If crime is a grave national danger, apathy towards this evil is a still greater danger. Urgent action is required from the public.

Let us earnestly and unremittingly pray that religious dignitaries, and institutions, the Clergy of all denominations, the National State Assembly, His Excellency the President, the Government, including the Armed Forces and the Police, the Parliamentary Opposition, all Political parties, the Press, the Courts of Justice, the Legal Profession, the Educational Authorities, Social, Cultural, and other Organizations without any exception and the student population and all individuals, jointly and severally, in all parts of the country be pleased to take immediate steps to arrest the growing evil and retrieve the position. Huge buildings, big Development Schemes, progress in Industry, Commerce, Agriculture, and in every sphere of human activity, mere preaching of religious dogmas, and high metaphysics, mechanical performances of elaborate religious ceremonies, international recognition and friendships, and Foreign Aid, will be of no avail ultimately if this Great Evil is not checked.

Decades ago, the onslaught of this Evil was anticipated, Justice M T, Akbar, Q C, who was also a great religious devotee, with his varied and rich experience as Lawyer, Jurist, Administrator, Legislator, Councillor, Educationist and his versatile knowledge and personal experience of conditions in foreign countries, sounded the alarm and along with the co-operation of other leaders, started the Anti-Crime Movement and founded Anti-Crime Societies Unfortunately, we the public did not diligently pursue the campaign and create permanent agencies and circumstances to eradicate or reduce the Incidence of Crime.

The formation of a Dharmishta Society of State might even become illusory. Our claim to be the Dharma Deepa would also be rendered untenable if the forward march of Crime, Enemy No 1 of the Nation is not halted.

A Parliamentary Commission or a Presidential Commission might prove helpful as a first step. Ad hoc Committees from the unofficial public could render substantial services and co-operation, One need not wait for another to take the first step in this most righteous cause

May God Almighty in His infinite Mercy and our bountiful Deities with their boundless Compassion, bless and reclaim and continue always to bless our dear motherland of Sri Lanka.

S. SIVASUBRAMANIAM,
103/2, Hulftsdorp Street,
Colombo 12.

# Saiva Jnana Darshanam

## Sutram 12

## Relating to Complete Purgation of ஆணவம், கன்மம் and மாயை

In the history of a soul's evolution and ascent towards God, it overcomes sensual hurdles like sorrow and happiness, good and evil life and death, all things and events evanescent and contradictory to each other. The God we are referring to in this case is Pati, the Lord, who gave his first impulse for the evolution of the soul, and it is this Pati who was in inseparable union with the soul, throughout its entire history of evolution, descent or ascent. when, at last the soul reaches the region of its origin, it has already realised its one-ness and inseparability with the Pati, its Lord. The soul no longer feels that he is a child of maya, but he feels that he has attained பதித்துவம், by the realisation of his one-ness with the Pati. This experience of one-ness with Pati, called கைவல்ய அநுபவம். is only the first stage up on the mountain path, that leads to the final transcendental bliss. To some jnanis this கைவல்ய அநுபவம் is the acme of their highest bliss that could ever be attained by man. To some others this கைவல்ய அநுபவம் of one-ness, gives them a status equal to that of the Pati and all his powers of creation preservation and destruction. But to the 'Saiva Jnani, this realisation of one-ness with the Pati is meant first and foremost, for the complete purgation of his original dress called ஆணவம். It is only after this purgation the soul is able to see that he was never a கர்த்தா, a doer in the true sense He is able to see that he is no longer a சங்கல்ப, அஹங்கார purusha. Even when the results of his past egoistic acts called பிராரப்த கன்மம் recoil on him, he responds to it as a mere witness quickly surrendering himself in blissful submission to his Lord's will and grace To him, his Lord has become everything. His former body is now his Lord's habitation. His organs of knowledge and action, his mind, and all his faculties have become the holy abode of his Lord and also the instruments and channels of his actions. It is only during this second stage of realisation, all worldly distractions and all Karmic vestments wither away from the soul leaving it high and dry in its utmost form of purity. A complete purgation of this nature is called in Saiva language ஆன்ம சுத்தி in its most perfect form.

A complete purgation of this nature is a necessary condition for a complete illumination of any soul. In this next sutram we propose to discuss the other stages of realisation which leads the soul to transcendental love and transcendental bliss, called திருவடிப்பேறு in our traditional works.

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்

Printed and published by the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna at their Saiva Prakasa Press, 450 K. K. S. Road, Vannarponnai, Jaffna on Friday, May 5, 1978.

EDITOR-IN-CHIEF: R. N. SIVAPIRAKASAM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org